Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
WEDNESDAY, APRIL 03, 2024

புதன்கிழமை ஏப்ரல் 03, 2024 | ஒளி: 09 கதிர்: 226 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

# குடிநீரின்றி 9,866 பேர் பாதிப்பு

நிலவும் வரட்சியான காலநிலை காரணமாகக் குடிநீரின்றி 2,927 குடும்பங்களைச் சேர்ந்த 9,866 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதில் கம்பஹா மாவட்டமே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## இலங்கைக்கு வந்துகொண்டிருந்த போது

# “பாலத்தில் மோதிய கப்பலில் வெடிபொருட்கள்”

### சஜித் குற்றச்சாட்டு; விசாரணைக்கு வலியுறுத்து

இலங்கைக்கு வருகை தந்து கொண்டிருக்கும் போது, அமெரிக்காவில் பாலத்தில் மோதிய கப்பலில் ஏராளமான வெடிபொருட்கள் மற்றும் அபாயகரமான பொருட்கள் இருந்துள்ளன. இவ்வாறான அபாயகரமான பொருட்களுடன் இக்கப்பல் ஏன் இலங்கை வந்தது என்பது தொடர்பில் முறையான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (02) விசேட கூற்றை முன்வத்தே இவ்வாறு வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் பேசுகையில், அமெரிக்காவின் பால்டிமோர் பாலத்தில் மார்ச் மாதம் 26ஆம் திகதி விபத்துக்குள்ளான சிங்கப்பூர் சரக்கு கப்பலான டாலி, 764 தொன் அபாயகரமான பொருட்களை இலங்கைக்கு கொண்டு வந்ததாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தொடர்ச்சி P2

# “கட்டுப்பாட்டுக்குள் கச்சத்தீவு உள்ளது”



“இலங்கையைப் பொறுத்தவரையில் கச்சத்தீவு இலங்கையின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. இந்தியா-இலங்கை உடனான வெளியுறவுக் கொள்கை ஆரோக்கியமாக உள்ளது என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கச்சத்தீவை திரும்ப ஒப்படைக்கும்படி இந்திய அரசு இதுவரை, எங்களிடம் எந்த கோரிக்கையும் வைக்கவில்லை. அவ்வாறு இந்திய அரசிடமிருந்து கோரிக்கை ஏதும் இருந்தால், இலங்கை வெளியுறவுத்துறை அதற்குப் பதிலளிக்கும்.” என்றும் தெரிவித்துள்ளார்.

கச்சத்தீவு தொடர்பில் அமைச்சர் ஜீவன் தொண்டமான், தெரிவித்திருந்த கருத்து, இந்திய ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

## கச்சத்தீவை மீட்டால் மட்டுமே

# “தமிழக மீனவர்களின் பிரச்சினைகளை தீர்க்கலாம்”

பாராளுமன்ற தேர்தல் நெருங்கும் நேரத்தில் கச்சத்தீவு விவகாரம் தற்போது பூதாகரமாகக் கிளம்பியுள்ளது. காங்கிரஸ் ஆட்சியின்போது இலங்கைக்குத் தாரை வார்த்ததாகப் பிரதமர் மோடி தெரிவித்தார். மேலும், காங்கிரஸ் கட்சியை எப்போதும் நம்ப முடியாது என்று குற்றம் சாட்டினார்.



இதற்கு எதிர்வினையாற்றியுள்ள திராவிட முன்னேற்றக் கழக (தி.மு.க.,) 10 ஆண்டுகளாக மத்தியில் ஆளும் பா.ஜ.க. அரசு, கச்சத்தீவை மீட்க நடவடிக்கை எடுக்காமல் தேர்தல் நேரத்தில் இந்த விவகாரத்தைக் கொண்டுவருவது ஏன் என கேள்வியெழுப்பியுள்ளது.

இந்த நிலையில், பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை கோவையில் செய்தியாளர்களை சந்தித்தார்.

தொடர்ச்சி P2

## பாடசாலை மாணவியர்களுக்கு

# சுகாதார துவாய்



பாடசாலை மாணவியர்களுக்கு சுகாதார துவாய் வழங்கும் வேலைத்திட்டத்துக்கு, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில், செவ்வாய்க்கிழமை (02) கூடிய வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கல்வியமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்தவினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்துக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மொத்தம் 04 மில்லியன் பேர் பாடசாலை மாணவர்களாக இருப்பதுடன், அவர்களில் 1.2 மில்லியன் மாணவிகள் பூப்படைந்தவர்களாக் கணக்கிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# மூதாட்டியின் சடலத்தின் கை பெருவிரலில் மை

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், உயிரிழந்த மூதாட்டியின் கை பெருவிரலில் மை கிடந்தமை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மூதாட்டியின் சொத்துக்களைச் சட்டவிரோதமாகப் பெற்று இருக்கலாம் எனும் சந்தேகத்திலேயே பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் திடீர் சுகவீனம் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காகப் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த நிலையில், உயிரிழந்த பெண்ணின் மகன் வெளிநாட்டில் இருந்து, வைத்தியசாலை பணிப்பாளருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, “தாயிடம் இருந்து சிலர் சட்டவிரோதமான முறையில் சொத்துக்களை எழுதி வாங்கியுள்ளார்” என எனக்குத் தகவல் கிடைத்துள்ளது. அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என கூறியுள்ளார்.



இதனை அடுத்து, பணிப்பாளர் சட்ட வைத்திய அதிகாரிக்கு இந்த விடயத்தினை தெரியப்படுத்தியுள்ளார். அத்துடன் திடீர் மரண விசாரணை அதிகாரியும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2



## விளையாட்டுப் போட்டி

# விசாரணைக்கு எதிராக முறைப்பாடு

■ நிதர்ஷன் வினோத்

பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை அச்சுறுத்துவதும் விசாரணைக்கு உட்படுத்துவதும் மனித உரிமை மீறல் எனச் சுட்டிக் காட்டியுள்ள இலங்கை ஆசிரியர் சங்கம் பொலிஸாரின் இத்தகைய செயற்பாடுகளுக்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளது.

மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ் பிராந்திய அலுவலகத்தில் இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் இந்த முறைப்பாட்டை செவ்வாய்க்கிழமை (02) பதிவு செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் இல்ல மெய்வல்லுனர் போட்டி கடந்த வாரம் நடைபெற்றது. அதில், இல்ல அலங்காரங்களில் மாணவர்களின் வெளிப்பாடுகள்

தொடர்ச்சி P2

# ‘அரகலய’ தொடர்பில் தெரிவுக்குழு வேண்டும்

அரகலய போராட்டத்தின்போது, நாட்டின் இறையாண்மைக்கு எதிராகச் செயற்பட்ட தேசிய மற்றும் சர்வதேச தரப்பினர் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளப் பாராளுமன்ற தெரிவுக்குழு அமைக்கப்பட வேண்டும். என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் சுயாதீன எதிரணி எம்.பியுமான விமல் வீரவன்ச சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (02) விசேட கூற்றை முன்வைத்தே இவ்வாறு வலியுறுத்திய அவர் மேலும் பேசுகையில், சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான வாக்கெடுப்பு நிறைவடைந்த தினத்தன்று சபாநாயகரான நீங்கள் சபைக்கு விசேட உரையாற்றினீர்கள்.

தொடர்ச்சி P2



**“ நாட்டின் இறையாண்மையை நெருக்கடிக் குள்ளாக்கும் வகையில் செயற்பட்ட தரப்பினர் தொடர்பில் நாட்டுக்குப் பகிரங்கப்படுத்த வேண்டும். இவ்விடயம் தொடர்பில் பாராளுமன்றத்தில் இரு நாள் விவாதத்தை நடத்த வேண்டும்**



# ‘அரகலய’வில் மக்களே அச்சுறுத்தல் விடுத்தனர்


‘அரகலய’ வின்போது மக்களின் இறையாண்மைக்கு இலட்சக்கணக்கான மக்களே அச்சுறுத்தல் விடுத்தார்கள். அந்தக் கட்டத்தில் வெளிநாட்டுத் தரப்பினர் எவரும் நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் விடுக்கவில்லை என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (02) விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றிய தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், சுயாதீன எதிரணி எம்.பியுமான விமல் வீரவன்சவின் வலியுறுத்தலுக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறுகையில், மக்களின் இறையாண்மையை இலட்சக்கணக்கான மக்களே அச்சுறுத்தினார்கள். அரகலய போராட்டத்தின்போது, பாராளுமன்ற கட்டிடத்தைச் சுற்றி வளைப்பதற்கு ஒரு தரப்பினர் வருகை தந்தார்கள். பாரிய போராட்டத்துக்கு மத்தியில் பாராளுமன்றத்தைப் பாதுகாத்தோம்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



# “பாலத்தில் மோதிய கப்பலில் வெடிபொருட்கள்”

டாலி, 764 தொன் அபாயகரமான பொருட்களை இலங்கைக்குக் கொண்டு வந்ததாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

4,700 கொள்கலன்கள் இருந்தன. அவற்றில் 56 வெடிபொருட்கள், லித்தியம் அயன் பேட்டரி, எரியக்கூடிய பொருட்கள் போன்ற அபாயகரமான பொருட்கள் மற்றும் 9 ஆவது வகை அல்லது கடுமையான ஆபத்தான பொருட்கள் இருந்தன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

4,644 ஏனைய கொள்கலன்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுவருகின்றன. உலகின் மிகப்பெரிய கடற்படைத் தளங்களான நியூயோர்க், விர்ஜினியா, நோர்போக் போன்ற இடங்களுக்குச் சென்று இந்தக் கப்பல் கொழும்பு நோக்கி வருகை தந்துள்ளது.

பாசல் சர்வதேச உடன்படிக்கையின் பிரகாரம், துறைமுகத்தில் இறக்குமதி, ஏற்றுமதி, பரிமாற்றம் மற்றும் நிறுத்தி வைத்தல் ஆகிய 4 விடயங்களிலும் மத்திய சுற்றாடல் அதிகார சபை அதற்கான அனுமதியை வழங்க வேண்டும். இதற்கான அனுமதி மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து பெறப்படவில்லை. நாட்டில் யாருக்கும் தெரியாமல் இவ்வாறான பொருட்கள் அனுப்பப்படுவதில்லை. இது ஆபத்தான நிலை. இந்த ஆபத்தான நிலை குறித்து ஒரு நாடு என்ற ரீதியில் விசாரணை நடத்தப்பட வேண்டும். மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அனுமதியின்றி எவ்வாறு இவ்வாறான தீங்கு விளைவிக்கும் பொருட்களை நாட்டுக்குள் கொண்டு வர முடியும் என்பதை நாம் ஆராய வேண்டும்.

2013இல் உருவாக்கப்பட்ட வணிக மைய ஒழுங்குமுறை மூலம்(The Commercial Hub Regulations) சில விதிகள் அமுல்படுத்தப்படாமல் பொருட்கள் மற்றும் பண்டங்கள் நாட்டிற்கு வருகின்றன.

இந்த ஏற்பாட்டைப் பயன்படுத்தி, 263 குப்பைகள் அடங்கிய கொள்கலன்கள் கூட நாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.

அப்போது சிரமப்பட்டு அக்குப்பைகள் திருப்பி அனுப்பப்பட்டன. எனவே, இதில் கவனம் செலுத்துங்கள்.

அரசாங்கம் பசுமைக் கொள்கையைக் கடைப்பிடித்து சர்வதேச சமூகத்திற்கு நம்பிக்கையான கருத்துக்களை வெளியிட்டு வருவதால் இது தொடர்பில் ஆராய்ந்து பார்க்க வேண்டும் இது குற்றச் செயல் இது தொடர்பில் உடனடியாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றார்.

# சுகாதார துவாய்



குறித்த மாணவியர்களில் மிகவும் பின்தங்கிய பாடசாலைகள், பின்தங்கிய பாடசாலைகள், அணுகல் வசதி குறைந்த பாடசாலைகள், தோட்டப் பாடசாலைகள் மற்றும் வறுமைப்பட்ட மாணவர்களைக் கொண்டுள்ள நகர்ப்புறப் பாடசாலைகளில் கல்வி பயில்கின்ற 800,000 மாணவிகளுக்கு 2024 ஏப்ரல் மாதத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் ஆண்டுதோறும் சுகாதார துவாய் வழங்குவதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

# “தமிழக மீனவர்களின் பிரச்சினைகளை தீர்க்கலாம்”

அப்போது கச்சத்தீவு விவகாரம் தொடர்பாக அவர் கூறியதாவது;

கச்சத்தீவு வேண்டும் என்பதே எங்களின் அதிகாரப்பூர்வ நிலைப்பாடு. அதன் பிறகு இதற்கான ஒவ்வொரு பணிகளையும் செய்துகொண்டிருக்கிறோம். கச்சத்தீவை மீட்பதற்கான முக்கிய நோக்கம், அப்போதுதான் தமிழக மீனவர்களின் பிரச்சனைகளைத் தீர்க்க முடியும் என்றார். .

இலங்கை அரசிடம் பேசி, கச்சத்தீவில் தமிழக மீனவர்கள் மீன் பிடிக்க அனுமதி பெறுவோமா அல்லது கச்சத்தீவைத் தமிழக மீனவர்கள் பயன்படுத்த அனுமதி பெறுவோமா அல்லது கச்சத்தீவையே திரும்பக் கேட்போமா என்பது குறித்துக் கடந்த மூன்று ஆண்டுகளாக ஆலோசித்து வந்தோம்.

கச்சத்தீவு பிரச்சனைக்கான தீர்வை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறோம். அறிவியல் பூர்வமாக, சட்ட ரீதியாக கச்சத்தீவை மீட்க நடவடிக்கை எடுத்துவருகிறோம்.

இந்த விவகாரத்தில் என்ன நடக்கிறது என்பதை நான் உங்களிடம் தெரிவிக்கிறேன். கச்சத்தீவை மீட்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்காதவர்கள், தற்போது என் மீது பாய்வது என்ன நியாயம்? என கேள்வியெழுப்பினார்.

# விசாரணைக்கு எதிராக முறைப்பாடு

தொடர்பாக தெல்லிப்பளை பிரிவு பொலிஸார் மாணவர்களையும் ஆசிரியர்களையும் விசாரணைக்கு அழைத்தமையும் விசாரணைக்கு உட்படுத்தியமையும் அடிப்படை மனித உரிமைகளை மீறுகின்ற நடவடிக்கையாகும்.

இலங்கை அரசியலமைப்பின் சட்ட வரையறைக்குட்பட்டு கருத்தியல் ரீதியாகவும் கலை ரீதியாகவும் குறியீட்டு வடிவங்கள் மூலமாகவும் பாடசாலை மட்ட இல்ல விளையாட்டுப் போட்டி அலங்காரங்களில் மாணவர்களின் பாடசாலை மட்ட வெளிப்பாடுகள் இலங்கை அரசியலமைப்பில் ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமைகள் தொடர்பான சிந்தனை மற்றும் மனசாட்சி சுதந்திரத்திற்கு உட்பட்டதாகும்.

இத்தகைய சுதந்திரங்களை மதிக்காத மெல்லிப்பளை பொலிஸாரின் அச்சுறுத்தல்களுடன் கூடிய விசாரணை செயற்பாடானது அடிப்படை மனித உரிமைகளை மீறுவதுடன் பாடசாலை நிர்வாகத்தினருக்கும் அடக்குமுறைகளை பிரயோகிக்கின்ற செயற்பாடுகளாகும்.

கல்வி செயற்பாடுகளில் தெள்ளிப்பளை பொலிஸாரின் அவசியமற்ற நடவடிக்கைகள் குறித்து இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலையீட்டினை கோரியுள்ளனர்.

இதேவேளை, தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் கடந்தவாரம் இடம்பெற்ற இல்ல மெய்வல்லுனர் போட்டியின் போது இல்ல அலங்காரங்களில் கவச வாகனங்கள் மற்றும் காந்தள் மலர் போன்ற தோற்றத்தில் அலங்காரம் செய்திருந்தாக அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை அழைத்து பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தியிருந்தனர்.

இவ்வாறான நிலைமையிலே அதிபர், ஆசிரியர் மற்றும் மாணவர்களை விசாரணைக்கு உட்படுத்தியமை மனித உரிமை மீறல் எனவும் பொலிஸாரின் இத்தகைய அச்சுறுத்தல்கள் அடக்குமுறைகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கம் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ‘அரகலய’ தொடர்பில் தெரிவுக்குழு வேண்டும்

அந்த உரையில் அரகலய போராட்டநேரத்தில் அரசியலமைப்புக்கு முரணான வகையில் ஜனாதிபதி பதவியைப் பொறுப்பேற்கத் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலும், அரசியல் தரப்பின் மட்டத்திலும் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டதாகக் கூறியிருந்தீர்கள் ‘9 செகவுனு’ என்று தலைப்பிடப்பட்ட புத்தகத்தை நான் வெளியிட்டேன். அதில் தேசிய மற்றும் சர்வதேச தரப்பினர் உங்களுக்கு அழுத்தம் பிரயோகித்ததையும், கொழும்பில் உள்ள தூதரகங்கள் செயற்பட்ட விதத்தையும் பெயர் குறிப்பிட்டு வெளிப்படுத்தியுள்ளேன். அதேபோல் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அண்மையில் வெளியிட்ட புத்தகத்தின் முன் அட்டையில் ‘சூழ்ச்சி’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், புத்தகத்துக்குள் அவ்வாறு எதுவும் குறிப்பிடப்படவில்லை. நீங்கள் பொய்யுரைக்கவில்லை என்று நான் நம்புகிறேன். அதேபோல் மனசாட்சிக்கு அமைய நானும் பொய்யுரைக்கவில்லை. முன்னாள் ஜனாதிபதியும் பொய்யுரைக்கவில்லை என்று நம்புகிறேன். பொருளாதார நெருக்கடியின் போது நாட்டின் இறையாண்மையை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் செயற்பட்ட தரப்பினர் தொடர்பில் நாட்டுக்குப் பகிரங்கப்படுத்த வேண்டும். ஆகவே, இவ்விடயம் தொடர்பில் பாராளுமன்றத்தில் இரு நாள் விவாதத்தை நடத்த வேண்டும்.

அத்துடன், அரகலய போராட்டத்தின் போது நாட்டின் இறையாண்மையை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் செயற்பட்ட தரப்பினர் குறித்து பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை அமைத்து விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்றார்.

# குடிநீரின்றி 9,866 பேர் பாதிப்பு

இதன்படி, கம்பஹா மாவட்டத்தில் 2,351 குடும்பங்களைச் சேர்ந்த 7,053 பேர் வரட்சியினால் குடிநீரின்றி பாதிக்கப்பட்டுள்ளதாகவும், கேகாலை மாவட்டத்தில் 576 குடும்பங்களைச் சேர்ந்த 2,813 பேர் குடிநீரின்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.

வரகாபொல, ருவன்வெல்ல, யட்டியந்தோட்டை, தெரணியகல, தெஹியோவிட்ட மற்றும் கலிகமுவ பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் என நிலையம் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மூதாட்டியின் சடலத்தின் கை பெருவிரலில் மை

இதன்போது, பெண்ணின் கை பெருவிரலில் மை அடையாளம் காணப்பட்டுள்ளது, அது தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

பொலிஸார் உயிரிழந்த பெண்ணை பராமரித்தவர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்த வேளை தாம் வைத்தியசாலையில் பெண்ணை அனுமதிக்கும்போது, பெருவிரலில் மை அடையாளம் இல்லை எனவும் பின்னர் எப்படி வந்தது என தமக்குத் தெரியாது எனவும் தெரிவித்துள்ளனர். தொடர்ந்தும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, வெளிநாட்டில் வசிக்கும் உயிரிழந்த பெண்ணின் மகன் வைத்தியசாலைக்கு நேரில் வருகை தந்து பெண்ணை அடையாளம் காட்டிய பின்னரே உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்படும் எனவும் , அது வரை சடலம் பிரேத அறையில் பாதுகாப்பாக வைத்திருக்கப்படும் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# அரகலய’வில் மக்களே அச்சுறுத்தல் விடுத்தனர்

நெருக்கடியின்போது, வெளிநாட்டுத் தரப்பினர் எவரும் நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் விடுக்கவில்லை. பாராளுமன்றத்தைச் சுற்றிவளைக்க முற்பட்டது இறையாண்மைக்கு விடுக்கப்பட்ட பாரியதொரு அச்சுறுத்தலாகும்.

உள்ளக மட்டத்தில் குறை பாடுகள் காணப்படும்போது, வெளி தரப்பினர் தலையிடுவார்கள். இது இயல்பானதே எமது தரப்பிலும் பல குறை பாடுகள் காணப்பட்டன. அரகலயவில் ஆரம்பத்தில் இருந்து அது வெளிப்பட்டது. ஆகவே, எதிர்காலத்தில் இவ்வாறான நிலை தோற்றம் பெறாத வகையில் பொறுப்புடன் செயற்படவேண்டியது அனைவரினதும் பொறுப்பு என்றார்.

# “மூவரையும் விசாரித்தால் உண்மையைக் கக்குவர்”

கனகராசா சரவணன்

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மைத்திபால சிறிசேன, கருணா, பிள்ளையான் ஆகியவர்களுக்கிடையே ஏதே ஒன்று மறைந்திருக்கின்றது. ஆகவே, அவர்கள் 3 பேரையும் கைது செய்து விசாரித்தால் இந்த குண்டுத் தாக்குதல் தொடர்பாகச் சரியான சூத்திரதாரி யார் என்பதை அறிய முடியும். எனவே இவர்களை உடன் கைது செய்து விசாரணை நடத்துமாறு பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் செவ்வாய்க்கிழமை (02) ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கருணா படையணி என்பது வழமையான செயற்பாடு. தேர்தல் நெருங்குகின்றது தேர்தலுக்கான நாடகம். கடந்த பாராளுமன்ற தேர்தலில் கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தைப் பூரண அதிகாரத்துடன் மீட்டுத் தருவதாகக் கூறி, தமிழ்த் தேசிய மக்களுக்கு வாக்களிக்க இருந்த மக்கள் எல்லாம் தன்பக்கம் திசைதிருப்பி வாக்குகளைச் சிதறடித்து அந்த மாவட்டத்தில் தமிழ் மக்கள் பிரதி நிதி ஒருவர் வராமல் செய்து முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கச் செய்த பெருமை செய்தவர். 2019 இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் தொடர்பாக தற்போது பலரின் வாயில் வித்தியாசமான செய்திகள் வந்துகொண்டிருக்கின்றது. பிள்ளையான் என்றழைக்கப்படும் இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தனின் ஆலோசகராக இருந்து சுவிஸ்நாட்டில் தஞ்சமடைந்துள்ள ஆசாத்மௌலான சனல் 4 ஊடகத்தில் பிள்ளையானை குற்றவாளி என தெரிவித்துள்ளார்.

ஆனால், பிள்ளையான் இன்று குண்டு தாக்குதலை வைத்து ஒரு புத்தகத்தை வெளியிட்டிருக்கின்றார். இதே நேரத்தில் முன்னாள் ஜனாதிபதி மைதிரிபால சிறிசேன காலத்தில் இந்த குண்டு தாக்குதல் இடம்பெற்றது. அவர் அப்போது வாய்திறக்காமல் ஜனாதிபதி பதவி இழந்து நீண்ட காலத்தின் பின் தற்போது வாயைத் திறந்து தனக்குச் சூத்திரதாரியைத் தெரியும் என்று தெரிவித்துள்ளார்.

ஆகவே சட்டத்தின் மத்தியில் சாட்சியங்கள் மறைக்கப்பட்டாலும் குற்றம். இந்த சாட்சியம் ஏற்கனவே சொல்லப்படாது இருந்தது பாரிய குற்றம். ஆகவே அவர் மீது தீவிரமான விசாரணை நடத்தப்பட்டு சரியான தகவலைத் தரவில்லை எனில் சட்டத்தின் முன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.


அதுதவிர ஈஸ்டர் குண்டு தாக்குதல் தொடர்பாக அசாத் மௌலான பிள்ளையான் தொடர்பாகத் தெரிவித்ததையும் பிள்ளையான் புத்தக வெளியிட்டுள்ளது தொடர்பாக கருணா கருத்து தெரிவித்துள்ளார் எனவே இவர்கள் எல்லோரும் கூட்டாக விசாரிக்கப்படவேண்டும் ஏதோ ஒன்று இவர்களுக்குள் மறைந்திருக்கின்றது

எனவே இந்த கருத்துக்களை வெளியிட்டு குற்றம் சாட்டும் முன்னாள் ஜனாதிபதி மைத்திபால சிறிசேன, கருணா என்று அழைக்கப்படும் முன்னாள் பிரதி அமைச்சர் வி.முரளீதரன், பிள்ளையான் என அழைக்கப்படும் இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன், ஆகிய 3 பேரை அரசாங்கம் கைது செய்து சரியாக விசாரித்தால் இந்த குண்டுத் தாக்குதல் தொடர்பாக சரியான சூத்திரதாரி கைது செய்யப்படுவார் என்றார்.

### 2022/23 நிதியாண்டில் வரிச் சலுகைகள்

# ரூ.978 பில்.வருவாயை இழக்க வழிவகுக்கும்

**2020 இல் வழங்கப்பட்ட வரி சலுகைகள், வரி வருவாயில் 56% சமமான வரி வருவாய் இழப்பை ஏற்படுத்தியுள்ளது**




PUBLIC FINANCE .lk

மூலம்: நிதி அமைச்சின் வரி செலவின அறிக்கை, இங்கே பெறலாம்: https://www.treasury.gov.lk/api/file/5f4318bb-b62a-4530-86ee-a423d26f162d

2022/23 நிதியாண்டில் (ஏப்ரல் முதல் மார்ச் வரை), வரிச்சலுகைகள் மொத்தமாக 978 பில்லியன் ரூபாயை வருவாயாக ஈட்டியதாக அரசாங்கம் (மார்ச் 31) தெரிவித்துள்ளது.

இது 2022ஆம் ஆண்டில் அரசாங்கத்தால் சேகரிக்கப்பட்ட மொத்த வரி வருவாயில் 56% ஆகும்.

வெறிற்றே ரிசர்ச் இனால் பராமரிக்கப்படும் இலங்கையின் முதன்மையான பொருளாதார நுண்ணறிவு தளமான PublicFinance.lk ஆல் இது முன்னிலைப்படுத்தப்பட்டது.

இலங்கையின் நிதி அமைச்சினால் 2024ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதி வெளியிடப்பட்ட "வரிச் செலவின அறிக்கை" என்ற ஆவணத்தை மூலமாகக் கொண்டு இந்த ஆய்வு வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை வழங்கிய பல்வேறு சிறப்பு இலக்கு வரிச் சலுகைகள் காரணமாக இழக்கப்பட்ட மொத்த வருவாய் குறித்த அரசாங்கத்தின் மதிப்பீடுகளை இந்த ஆவணம் தெரிவிக்கிறது. "சர்வதேச சிறந்த நடைமுறைகளிற்கேற்ப இலங்கையின் நிதி அறிக்கைகளில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவது" என ஆவணம் அதன் நோக்கத்தைக் கூறுகிறது.

IMF திட்டத்தில் அரையாண்டு அடிப்படையில், "முதலீட்டு வாரியம் மற்றும் SDP [மூலோபாய மேம்பாட்டுத் திட்டங்கள் சட்டம்] மூலம் வரி விலக்கு பெறும் அனைத்து நிறுவனங்களின் பட்டியல் மற்றும் வரி விலக்கு பெறுமானத்தின் மதிப்பீடுகளை"வெளியிடுவதற்கு அரசாங்கம் உறுதியளித்துள்ளது. இந்த வெளிப்படுத்தலைத் தொடங்குவதற்கான கடைசித் திகதி மார்ச் 2023 ஆகும்.

இது பெப்ரவரி 2024ஆம் ஆண்டு கடைசியாகப் புதுப்பிக்கப்பட்டதன்படி, "IMF ட்ராக்கர்" இனால் "நிறைவேற்றப்படவில்லை" என்று பதிவு செய்யப்பட்டது.

# எலி புழுக்கை சிக்கியது

■ நூருல் ஹுதா உமர்



கல்முனை- சாய்ந்தமருது பிரதேசங்களில் உள்ள வெதுப்பகங்களில் முன்னெடுக்கப்பட்ட சோதனையின்போது, எலி புழுக்கை காணப்பட்ட உணவு பண்டங்கள் செவ்வாய்க்கிழமை (02) கைப்பற்றப்பட்டுள்ளது.

சுகாதாரமற்ற சிற்றுண்டிகள் பொதுமக்களுக்கு விற்கப்படுவதைத் தடுத்து உணவு பாதுகாப்பு மற்றும் சுத்தமான உணவைப் பொதுமக்களுக்கு உறுதிப்படுத்தல் என்ற நோக்கில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸஹீலா இஸ்ஸதீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி எம்.ஜே.கே.எம். அர்ஷாத் காரியப்பர் தலைமையில் இந்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது, பாவனைக்கு பொருத்தமற்ற பழுதடைந்த மீன்கள் எரிபொருள் ஊற்றி அழிக்கப்பட்டதுடன், உணவகங்கள், வெதுப்பகங்களில் மனித பாவனைக்குப் பொருத்தமற்ற மட்டும் எலி புழுக்கைகள் காணப்பட்ட உணவு பண்டங்கள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் சாய்ந்தமருது பிரதேச உணவகங்கள், சந்தை, சில்லறைக் கடைகள், மொத்த விற்பனை நிலையங்கள், சிறிய சூப்பர் மார்க்கெட்கள் போன்றவற்றைப் பார்வையிட்ட சாய்ந்தமருது சுகாதார அதிகாரிகள் உரிமையாளர்களுக்கும், உணவு தயாரிப்பவர்களுக்கும் சுகாதார நடைமுறைகளைப் பேணி உணவுகளைத் தயாரிக்குமாறும், உணவகங்கள் சுத்தமில்லாது இருத்தல், உணவு கையாளுகையில் முறையான ஒழுங்கின்மை, நீண்ட நாட்களுக்கு பொருத்தமில்லாதவாறு உணவுகளைத் தேக்கி வைத்தல், சமையல் பாத்திரங்கள் மற்றும் சமையல் பொருட்களின் தரம் போன்றவற்றைச் சுகாதார முறைப்படி பேணுமாறும் ஆலோசனை வழங்கியதுடன், அறிவித்தல்களைப் பேணி நடக்காத உணவகங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்திருந்தனர். அதன் தொடர்ச்சியாகவே இந்த சோதனை நடவடிக்கை இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.




# காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கி வைப்பு

■ அ.அச்சுதன்

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவில் 100 குடும்பங்களுக்குக் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், பிரதேச செயலாளர், உட்பட அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

# உறவினர்களுக்கிடையில் மோதல்; கையை இழந்த இளைஞன்

■ எம்.றொசாந்த்




யாழ்ப்பாணம்- புலோலி பகுதியில், உறவினர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் இளைஞன் ஒருவர் மணிக்கட்டுடன் கையை இழந்துள்ள சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (31) இரவு இடம்பெற்றுள்ளது.

புலோலி பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய செல்வநாயகம் செந்தூரன் எனும் இளைஞனே இவ்வாறு மணிக்கட்டுடன் ஒரு கையை இழந்துள்ளார்.

உறவினர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில், வாள் வெட்டு தாக்குதலால் குறித்த இளைஞனின் கை துண்டாடப்பட்டுள்ளதுடன், அவரை மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில், மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள பருத்தித்துறை பொலிஸார், சந்தேக நபர்களை அடையாளம் கண்டுள்ளதாகவும், தற்போது அவர்கள் தலைமறைவாகியுள்ள நிலையில் அவர்களைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

# காதை கிழித்த சு.க. உறுப்பினர் கைது




காதில் மூன்று தையல்கள் போடுமளவுக்கு அறைந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில், கண்டி மாநகர சபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் உறுப்பினர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி மாநகர சபையின் திண்மக்கழிவு முகாமைத்துவ திணைக்கள ஊழியர் ஒருவரைத் தாக்கியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் பேரிலேயே அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தாக்குதலின்போது, நகர சபை ஊழியருக்குக் காது பகுதியில் பலத்த காயங்கள் ஏற்பட்டதாகவும், அந்த காயங்கள் காரணமாக அவரது காது பகுதியில் மூன்று தையல்கள் போடப்பட்டதாகவும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சம்பவத்தன்று மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரான இந்திக்க தென்னகோன், குப்பைகளை வகைப்படுத்தாமல், குப்பைப் பையை வாகனம் மூலம் கொண்டு வந்துள்ளனர்.

அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த ஊழியர்கள், குப்பையை முறையாகக் கொண்டு வருமாறு கூறி, குப்பை பொறுப்பெடுக்காது, காரிலேயே ஏற்றிவிட்டுள்ளனர். அத்துடன், வாகனத்தை இலக்கத்தைப் படம் எடுக்க முயன்றுள்ளனர். இதன்போது, தாக்கியுள்ளார்.

இந்த தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து திண்மக்கழிவு முகாமைத்துவ திணைக்களத்தின் கண்டி- சுதாஹும்பொல ஊழியர்கள் வேலையில் இருந்து செவ்வாய்க்கிழமை (02) விலகியுள்ளனர். குப்பைகளை முறையாக பிரிக்காமல் முறையாக அகற்றுவது பாரிய பிரச்சினையாக மாறியுள்ளதாக கண்டி மாநகர ஆணையாளர் இஷான் விஜேதிலக தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்த கண்டி பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# ஆர்ப்பாட்ட பேரணி

■ க.அகரன்

சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிக்குமாறு கோரி வவுனியா வைத்தியசாலையின் சுகாதார தொழிற்சங்கங்கள், ஆர்ப்பாட்ட பேரணியொன்றை செவ்வாய்க்கிழமை (02) மேற்கொண்டுள்ளனர்.

வவுனியா வைத்தியசாலை வளாகத்திற்குள் இருந்து ஆரம்பமான குறித்த பேரணி யாழ். வீதி வழியாக சென்று மீண்டும் வைத்தியசாலையினை அடைந்து நிறைவு பெற்றுள்ளது.

இதன்போது கருத்து தெரிவித்த அவர்கள்,

"சுகாதாரத்துறையின் ஒரு பகுதியினருக்கு மாத்திரம் வழங்கப்பட்ட கொடுப்பனவு அனைவருக்கும் வழங்கப்படவேண்டும், அத்துடன், முறையான பதவி உயர்வுகள் வழங்கப்படவில்லை, இதேவேளை, நிலுவைக் கொடுப்பனவுகள், சீருடைக் கொடுப்பனவுகள் போன்றன நீண்டகாலமாக வழங்கப்படவில்லை,

இந்த விடயங்கள் தொடர்பாகத் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுகின்ற போதும், எந்த பயனும் கிடைக்காத நிலைமையே நீடிக்கின்றது.

எனவே, எமது கோரிக்கையினை அரசாங்கம் செவிமடுக்காவிடில் நாளைய தினத்திலிருந்து தொடர் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தினை முன்னெடுப்பதற்குத் தாயாராகிவருவோம்" என தெரிவித்துள்ளனர்.

# நாய் துரத்தியதில் மான் மரணம்



நாய் பிடியிலிருந்து தப்பியோடிய மான் ஒன்று கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்துள்ள சம்பவம் திங்கட்கிழமை (01) இடம்பெற்றுள்ளதாக நல்லத்தண்ணி வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஹட்டன்- காமினிபுர பிரதேசத்தில் அமைந்துள்ள வீடொன்றின் கிணற்றுக்குள் இருந்து சத்தமொன்று கேட்டதால் வீட்டார் சென்று பார்த்தபோது, கிணற்றுக்குள் மான் ஒன்று விழுந்திருந்ததாகவும், அதனை மீட்டு வனஜீவராசிகள் அதிகாரிகளிடம் ஒப்படைப்பதற்காகக் கூடொன்றுக்குள் வைத்திருந்த நிலையில் உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

உயிரிழந்த மான், நல்லத்தண்ணி வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகளால் செவ்வாய்க்கிழமை (02) காலை எடுத்துச் செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மோதலில் 22 பேர் காயம்

■ எம்.றொசாந்த்




யாழ்ப்பாணம் புறநகர்ப் பகுதியில் இரண்டு வன்முறை கும்பல்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தில், 22 பேர் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதல்களுக்கு இலக்காகி காயங்களுடன் திடீரென 22 பேர் வைத்தியசாலையில் குறிப்பிட்ட சில மணி நேரங்களுக்குள் அனுமதிக்கப்பட்டமையால், வைத்தியர்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்கள், அவர்களுடன் உதவிக்கு வந்தவர்களும் வைத்தியசாலையினுள்ளும் மோதலில் ஈடுபட முயன்றுள்ளார்கள் என தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# திடீர் தீ விபத்து



■ எம்.யூ.எம்.சனூன்

மதுரங்குளி- முக்குதொடுவாவை பிரதேசத்தில் வீடொன்றில் ஞாயிற்றுக்கிழமை (01) தீ விபத்து ஏற்பட்டுள்ளதையடுத்து, சிலாபம் மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினர் தீயணைப்பு பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

இவ்விபத்தின் போது வீட்டிற்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்கள் சேதமடைந்துள்ளதாகவும், உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அப் பிரதேசத்தின் டின் மீன் தொழிற்சாலை தொடர்பாக வீட்டின் உரிமையாளருடன் ஏற்பட்ட பிரச்சினையின் காரணமாகவே குறித்த தீ விபத்து இடம் பெற்றுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# விளையாட்டு கருத்தியலும் சித்தாந்தம் இல்லாத விளையாட்டும்

விளையாட்டு என்பது பொழுதுபோக்குக்காகவும், மகிழ்ச்சிக்காகவும், சில வேளைகளில் கற்பித்தல் நோக்கத்துக்காகவும் நடத்தப்படும் கட்டமைப்பு கொண்ட ஒரு செயற்பாடாகும். ஆனால், எதற்கெடுத்தாலும் விளையாட்டுப் போட்டி நடத்தப்படுகின்றது. தனிநபர் கூட, தன்னுடைய பிரதேசத்தில் போட்டியை நடத்துகின்றார். சிலர் நிதியை ஏப்பம் விட்டுவிடுகின்றனர்.

பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்களால், கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் நடத்தப்படுகின்றன. அதிலிருந்து திரட்டப்படும் நிதி பாடசாலைகளின் முன்னேற்றத்துக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. அதனையும் சுருட்டிக்கொள்வோரும் உள்ளனர்.

பாடசாலைகளில் இல்லங்களுக்கிடையில் விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்படுகின்றன. நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான வெப்பம் காரணமாக, விளையாட்டுப் போட்டிகளை நடத்தவேண்டாமென கல்வியமைச்சு அறிவுறுத்தியுள்ளது. எனினும், கடுமையான வெப்ப காலநிலை நிலவாத பிரதேசங்களில் மெய்வல்லுநர் விளையாட்டுப்போட்டிகள் நடத்தப்படுகின்றன.

அதில், இல்ல அலங்கரிப்புகள் முக்கிய இடத்தை வகிக்கும், யாழ்ப்பாணம் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் இல்ல மெய்வல்லுனர் போட்டியின் இல்ல அலங்காரங்களில் மாணவர்களின் வெளிப்பாடுகள் சர்ச்சைக்கு உள்ளாகியிருந்தன. கார்த்திகைப் பூ வடிவிலும், போர் தாங்கி வடிவிலும், இல்ல அலங்கரிப்புக்கள் இடம்பெற்றிருந்ததாக பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இலங்கை அரசியலமைப்பின் சட்ட வரையறைக்குட்பட்டு கருத்தியல் ரீதியாகவும் கலை ரீதியாகவும் குறியீட்டு வடிவங்கள் மூலமாகவும் பாடசாலை மட்ட இல்ல விளையாட்டுப் போட்டி அலங்காரங்களில் மாணவர்களின் பாடசாலை மட்ட வெளிப்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அவ்வாறான நிலையில், விசாரணைகள் நடத்தப்பட்டதை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இவை இரண்டும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உரித்துடையன, அந்த சித்தாந்தம் மாணவர்களிடத்தில் விதைக்கப்பட்டுவிடக்கூடாது என்ற கோணத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கலாம். ஆனால், இனங்களுக்கு இடையில் குரோதங்களை விதைக்கும் வகையிலான பேச்சுகள், உரைகள் தொடர்பில், பல சந்தர்ப்பங்களில் புலனாய்வாளர்கள் மௌனமாக இருந்துவிடுகின்றனர். இது எந்தளவுக்கு நியாயமானது.

இந்த விவகாரம் தொடர்பில், மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆகையால், உரிய முறையில் விசாரணைகளை முன்னெடுத்து, விசாரணைகள் எனும் போர்வையில் மாணவர்களின் மனங்களில் பிரிவினையை விதைத்துவிடவேண்டாமென உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தல் வழங்கவேண்டும். இல்லையேல், மாணவர்களைப் பிரிவினைக்குள் இழுத்துவிடுவதாய், விசாரணைகள் அமையும் என்பதில் ஐயமில்லை.

இதற்கிடையில் எவ்விதமான சித்தாந்தமும் இல்லாமல் ஹட்டன்-லெதண்டி தோட்டத்தில் நடத்தப்பட்ட, ஆகக்கூடுதலாக மது அருந்தும் போட்டியில் பங்கேற்ற மூவரில் ஒருவர் மரணித்துவிட்டார். மற்றுமொருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதுதொடர்பில் உரிய விசாரணைகளை நடத்தி, அந்த விளையாட்டுப் போட்டியை நடத்தியவர்களைக் கைது செய்து சட்டத்தின் முன்னிறுத்தி ஒரு பாடத்தைக் கற்பிக்கவேண்டுமென வலியுறுத்துகின்றேன்.




தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# தேர்தலை ஒத்திப் போடவா தேர்தல் சட்டத் திருத்தம்?



எம்.எஸ்.எம்.ஐயூப்

அடுத்து நடைபெறப் போவது ஜனாதிபதித் தேர்தலா அல்லது பாராளுமன்றத் தேர்தலா என்றதோர் விவாதம் நடைபெற்றுக்கொண்டு இருக்கும் நிலையில் பாராளுமன்ற தேர்தலுக்கும் கலப்பு தேர்தல் முறையை அறிமுகப்படுத்த அமைச்சரவை கடந்த மார்ச் 18ஆம் திகதி முடிவு செய்துள்ளது.

கடந்த அரசாங்கம் தேர்தல் செலவுகள் தொடர்பாக சட்டமூலமொன்றை நிறைவேற்றியது. அதன் அடிப்படையிலேயே பாராளுமன்றத் தேர்தலுக்காகவும் கலப்புத் தேர்தல் முறையை அறிமுகப்படுத்துவதற்காகச் சட்டத் திருத்தமொன்றைக் கொண்டுவர அரசாங்கம் கருதுவதாக அரசாங்க தகவல் திணைக்களம் அன்றே அறிக்கையொன்றின் மூலம் தெரிவித்து இருந்தது.

அதன் பிரகாரம் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சிகளினதும் கருத்துக்களை அறிந்து அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்க அமைச்சரவை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அக்குழு அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடியதாகவும் அக்கட்சித் தலைவர்கள் தொகுதி வாரியாக 160 பாராளுமன்ற உறுப்பினர்களையும் தேசிய அல்லது மாகாண மட்டத்தில் விகிதாசாரப் படி 65 உறுபப்னர்களையும் தெரிவு செய்ய உடன்பட்டதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், பாராளுமன்ற தேர்தல் முறையை மாற்றும் வகையில் அரசியலமைப்பைத் திருத்தச் சட்ட வரைவுத் திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்றும் அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

இந்த விடயம் சிறுபான்மை மக்களுக்கு, குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழும் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு மிகவும் முக்கிய விடயமாகும்.

ஏனெனில், அம்மக்களுக்கு தற்போதைய விகிதாசார தேர்தல் முறையே சாதகமாக அமைகிறது. தகவல் திணைக்களத்தின் அறிக்கையின் படி எதிர்காலத்தில் வடக்கு கிழக்குக்கு வெளியே வாழும் சிறுபான்மையினரின் அரசியல் பிரதிநித்ததுவம் குறையும் சாத்தியம் இருக்கிறது.

இவ்வறிக்கையின் படி கடந்த வருடம் நிறைவேற்றப்பட்ட தேர்தல் செலவுகள் தொடர்பான சட்டத்தின் காரணமாகவே கலப்புத் தேர்தல் முறை அவசியாகியிருக்கிறது. ஆயினும் 2001 முதல் மூன்று பாராளுமன்ற தெரிவுக் குழுக்கள் அம்முறையின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளது.

அக்குழுக்களில் ஒன்று 2001ஆம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் காலத்தில் நியமிக்கப்பட்டது. இரண்டாவது 2006ஆம் ஆண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷவின் பணிப்பின் பேரில் நியமிக்கப்பட்டது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவின் காலத்தில் அதாவது 2021ஆம் ஆண்டு மூன்றாவது தெரிவுக் குழு நியமிக்கப்பட்டது. எனவே கலப்புத் தேர்தல் முறையின் அவசியம் தேர்தல் செலவுகள் சட்டத்தின் காரணமாகவே தோன்றியது என்பது பிழையாகும்.

இத்தெரிவுக் குழுக்கள் விடயத்தில் ஒரு முக்கிய தகவல் என்னவென்றால் அம்மூன்றினதும் தலைவராக தற்போதைய பிரதமரும் அக்காலங்களில் அமைச்சராக இருந்தவருமான தினேஷ் குணவர்தனவே நியமிக்கப்பட்டார் என்பதேயாகும். அதேவேளை, இம்மூன்று குழுக்களும் கலப்புத் தேர்தல் முறையே இலங்கைக்குப் பொருத்தமானது என்று பரிந்துரைத்துள்ளது என்பதும் முக்கியமான விடயமாகும்.

தமது தலைமையில் ஒரு குழு ஒரு விடயத்தைப் பற்றி பறிந்தரைகளை சமர்ப்பித்து இருக்கும் நிலையில், அதே விடயத்தைப் பற்றி மீண்டும் மீண்டும் குழுக்கள் நியமிக்கப்பட்டு தாமே அதற்குத் தலைவராக நியமிக்கப்படும்போது, அதனை மறுக்காமல் ஏற்றுக்கொண்டு மாதக் கணக்கில் கூட்டங்களை நடத்தி அதே பரிந்துரைகளையே மீண்டும் மீண்டும் வழங்கிய "பெருமை" தினேஷ் குணவர்தனவே சாரும்.

எவ்வாறாயினும், இக்குழுக்களின் பரிந்துரைகளின் படி கலப்புத் தேர்தல் முறையின் கீழ், உள்ளூராட்சிமன்ற மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்த ஏற்கனவே சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இப்போது பாராளுமன்ற தேர்தல்கள் விடயத்திலும் அம்முறையை அறிமுகப்படுத்தச் சட்டங்களை வரைய சட்ட வரைவு திணைக்களம் பணிக்கப்பட்டுள்ளது. இதன்போது, பிரதமர் "தினேஷ் குணவர்தனவின் தலைமையிலான குழுவின் பரிந்துரைகளையும் கவனத்தில் கொள்ளுமாறு" அத்திணைக்களத்துக்கு அமைச்சரவையால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாகப் பிரதமரின் தலைமையில் கடந்த இரண்டு தசாப்த காலத்தில் மூன்று குழுக்கள் நியமிக்கப்பட்டு இருக்க, அவரது தலைமையிலான குழு என்று கூறும் போது அமைச்சரவை பெரும்பாலும் இறுதியாக 2021ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட குழுவையே குறிப்பிடுகிறது என்று நாம் ஊகிக்க வேண்டியுள்ளது.

இந்நாட்டு அரசியல்வாதிகள், குறிப்பாக ஆட்சியில் இருப்பவர்கள் ஞாபக சக்தியை இழந்தவர்கள் போல் தான் தெரிகிறது. தேர்தல் செலவுகள் தொடர்பான சட்டத்தை அமுலாக்க முற்பட்டு அதனடிப்படையில் கலப்பு தேர்தல் முறையின் அவசியத்தை உணர்ந்த போது இதற்கு முன்னர் மூன்று பாராளுமன்ற தெரிவுக்குழுக்கள் அதனை பரிந்துரைத்துள்ளன என்றும் அதன்படி, ஏற்கனவே உள்ளூராட்சிமன்ற மற்றும் மாகாண சபைத் தேர்தல்களுக்காகக் கலப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் அவர்கள் மறந்துவிட்டனர்.

எனவே தான் அம்முறையைப் பற்றி அரசியல் கட்சிகளின் கருத்துக்களைக் கண்டறிய அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டது. அவ் உப குழு தெரிவுக்குழுக்கள் மூலம் மூன்று முறை தமது கருத்துக்களைத் தெரிவித்த அதே அரசியல் கட்சிகளிடம் சென்று கருத்துக்களைக் கேட்டுள்ளது. அவ்வரசியல் கட்சிகளும் மீண்டுமொரு முறை கலப்புத் தேர்தல் முறையே வேண்டும் என்று கூறியுள்ளன.

அதன் பிரகாரம் பாராளுமன்றத் தேர்தலுக்கும் கலப்புத் தேர்தல் முறையை அறிமுகப்படுத்த சட்டம் வரையுமாறு சட்ட வரைவுத் திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்கும் போது தான் பிரதமரின் தலைமையிலான தெரிவுக்குழுவொன்று ஞாபகத்துக்கு வந்துள்ளது. (ஏனைய இரண்டையும் மறந்துவிட்டார்கள் போலும்.) எனவே அத்தெரிவுக்குழுவின் பரிந்துரைகளையும் கவனத்துமல் கொள்ளுமாறு சட்ட வரைவுத் திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அவ்வாறு ஆலோசனை வழங்கும்போது, மற்றுமொரு முக்கிய விடயத்தையும் அவர்கள் மறந்துவிட்டார்கள். அதாவது கலப்பு தேர்தல் முறையை அறிமுகப்படுத்தப் பாராளுமன்ற தேர்தல் சட்டத்தில் கொண்டுவர வேண்டிய மாற்றங்களைப் பரிந்துரைக்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் முன்னாள் பிரதம நீதியரசர் பிரியசாத் டெப் தலைமையில், 9 பேரர் கொண்ட ஆணைக்குழுவொன்றை நியமித்தார் என்பதே அந்த விடயமாகும்.

அவ்வாணைக்குழு ஆறு மாதங்களில், அதாவது இம்மாதம் 16ஆம் திகதிக்கு முன்னர் தமது பரிந்துரைகளைச் சமர்ப்பிக்க வேண்டும். அதன் பின்னர் தான் அப் பரிந்துரைகளின் படி, சட்டமியற்ற சட்ட வரைவுத் திணைக்களத்தைப் பணிக்க வேண்டும். எனினும், அவ்வாணைக்குழுவை மறந்து அல்லது புறக்கணித்து அரசாங்கம் அதே விடயம் தொடர்பாகச் சட்டம் வரையுமாறு அத்திணைக்களத்தைப் பணித்துள்ளது, அல்லது பணிக்கப் போகிறது.

ஞாபக சக்தியை இழந்தவர்களாகவே இத்தலைவர்கள் செயற்படுகின்றனர் என்பது இனப் பிரச்சினை விடயத்திலும் பொருளாதார விடயங்களின் போதும் காணக்கூடியதாக இருந்தது.

2023ஆம் ஆண்டு 75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 2022ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட விவாதத்தின் போது கூறினார்.

அதனை மறந்து அவர் 2023ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேசிய தைப் பொங்கல் விழாவில் உரையாற்றுகையில் இரண்டு வருடங்களில் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தைப் பூரணமாக அமுலாக்குவதாக கூறினார்.

அதனையும் மறந்து அதே ஆண்டு ஐக்கிய தேசிய கட்சியின் மே தினக் கூட்டத்தில் உரையாற்றும் போது அதே ஆண்டு இறுதிக்குள் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதாகக் கூறினார்.

அது ஒரு புறமிருக்க, தேர்தல் சட்ட மாற்றம் தெர்டர்பாக இரண்டு தசாப்தங்களாக முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை அமுலாக்காது பாராளுமன்ற தேர்தலொன்று நெருங்கி வரும் நிலையில் அதற்கான சட்டங்களை வரைய ஏன் அரசாங்கம் முன்வந்துள்ளது என்று எதிர்க் கட்சிகள் கேள்வி எழுப்பியுள்ளன. கடந்த பொதுத் தேர்தலில் மாவட்ட ரீதியில் ஒரு ஆசனத்தையாவது வெற்றி பெறாத ஐ.தே.க எதிர்வரும் பொதுத் தேர்தலுக்குப் பயந்து அத் தேர்தலை ஒத்திப் போடவே முயல்கிறது என்பதே எதிர்க் கட்சிகளின் வாதமாகும்.

ஐ.தே.க வின் கடந்த கால நடவடிக்கைகளைக் கருத்திற்கொள்ளும் போது, குறிப்பாக 2017ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தல்களைக் காலவரையறையின்றி ஒத்தி வைக்க மேற்கொண்ட சூழ்ச்சியைக் கருத்திற்கொள்ளும் போது எதிர்க் கட்சிகளின் வாதத்தை நிராகரிக்க முடியாது.

2017ஆம் ஆண்டு; ஆட்சியில் இருந்த ஐ.தே.க மாகாண சபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்கான சட்டமூலமொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது.

அது தொடர்பான குழுநிலை விவாதத்தின்போது பெண்கள் பிரதிநித்துவத்தோடு சம்பந்தமே இல்லாத கலப்பு தேர்தல் தொடர்பான திருத்தமொன்றை ஆளும் கட்சி முன்வைத்து நிறைவேற்றிக்கொண்டது.

அத்திருத்தத்தைத் தனியாக சட்டமூலமாகவே சமர்ப்பித்திருக்க வேண்டும் அவ்வாறு செய்திருந்தால் அது உயர் நீதிமன்றத்தால் ஆராயப்பட்டு சிலவேளை அச்சட்டமூலம் அல்லது அதன் சில வாசகங்கள் அரசியலமைப்புக்கு முரணானது என்று தீர்ப்பு வழங்கப்பட்டு இருக்கலாம்.

சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. ஆளும் கட்சியும் சேர்ந்து அதனை நிராகரித்தது. அதன் பின்னர் பிரதமரின் (ரணிலின்) தலைமையில் புதிய அறிக்கை சமர்ப்பித்திருக்க வேண்டும். அவர் சமர்ப்பிக்கவில்லை. எனவே, மாகாண சபைத் தேர்தல்கள் கடந்த ஆறரை ஆண்டுகளாக நடைபெறாமல் இருக்கிறது.

எனவே பழைய விகிதாசார முறைப்படி தேர்தலை நடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்பி எம்.ஏ. சுமந்திரன் தனிநபர் சட்டமூலமொன்றை சமர்ப்பித்தார். ரணிலின் தலைமையிலான தற்போதைய அரசாங்கம் அதையாவது விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளாமல் இருக்கிறது.



## வாழ்வியல் தரிசனம்

"நானும் நீயும் வேறல்ல" சகல கோள்களும் பிரபஞ்சத்தினுள் அடக்கம். இந்தப் பாரிய வெளியான ஆகாயத்தில் கோள்கள், வால் வெள்ளிகள் எல்லாமே சுற்றியபடி, நீந்துமாற்போல் இயங்கிய வண்ணமாக இருக்கின்றன. இதனுள் உள்ள துகள்களில் தானே தேகங்களை உருவாகின்றன.


உடல் அழிவதும், ஆன்மா வேறு உடல் வடிவம் பெறுவதாகச் சொல்லப்படுகின்றது. மேலும், உலகில் வாழும் மனித உடல்களுடன் காற்றுத் துகள், உட்பட கோடிக்கணக்கான அணுக்களின் வியாபகங்கள், உலகம் பூராகவும் சகல உயிர்கள், தாவரங்கள், விலங்குகள், உட்பட எல்லாமே எங்கமிப்பது புதுமையல்ல.

மூச்சுகள் எல்லா உயிர்களில் நடக்கும். இவை மட்டுமல்ல, எல்லாமே உலகை இணைக்கின்றன. எனவே தான் இந்த அணுச் சேர்கையினால் "நானும் நீயும் வேறல்ல" என்று உணருவது ஆச்சரியம் அல்ல. பேரண்டத்தில் உள்ளதே இந்த தேகத்திலும் வந்து சேரும். எல்லா உயிரினங்களுமே ஒன்றுக்கொன்று தொடர்புபட்டவை.

– பருத்தியூர் பால– வயிரவநாதன்

## கடிதங்கள்

## மக்கள் அவதி



ஹட்டன் - பொகவந்தலாவ பிரதான வீதியில் பிரதேசவாசிகளால் கொட்டப்படும் குப்பைகளை ஹட்டன்- டிக்கோயா மாநகர சபை சுமார் ஒரு வார காலமாக அகற்றாததால் தாம் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளதாக அட்டன் மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடும் மழையுடன் வடிகாலின் ஊடாக நகரத்திலிருந்து வெளியேற்றப்படும் குப்பைகள் ஹட்டன்- பொகவந்தலாவ பிரதான வீதியில் அமைந்துள்ள விரிகுடாவில் தேங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஹட்டன்- டிக்ஓயா மாநகர சபைக்கு கழிவுநீரை அகற்ற நிரந்தர காணி இல்லாததால் கழிவுநீரை அகற்றுவதில் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக ஹட்டன் - டிக்ஓயா மாநகர சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

### தேர்தல் களத்தில் சூடுபிடித்துள்ள கச்சத்தீவு விவகாரம்:

# என்ன சொல்கிறார்கள் இராமேஸ்வரம் மீனவர்கள்?



மக்களவைத் தேர்தல் தமிழகத்தில் ஏப்.19 அன்று நடைபெற உள்ளது. இந்நிலையில், தமிழக தேர்தல் களத்தில் கச்சத்தீவு விவகாரம் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆர்.டி.ஐ தகவல்களுடன் கச்சத்தீவு விவகாரத்தை பாராதிய ஜனதா கட்சியின் ( பா.ஜ.க.) மாநில தலைவர் அண்ணாமலை தொடங்கி வைக்க, கச்சத்தீவு தொடர்பாக காங்கிரஸ் கட்சியை பிரதமர் நரேந்திர மோடி விமர்சித்தார். இதற்கு காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, “கச்சத்தீவை மீட்போம் என இன்று கூறிவரும் பிரதமர் மோடி, 10 ஆண்டுகளாக என்ன செய்து கொண்டிருந்தார்?” என்றும், “10 ஆண்டுகளாக கும்பகர்ணத் தூக்கத்தில் இருந்துவிட்டு, தேர்தலுக்காகத் திடீர் மீனவர் பாச நாடகத்தை அரங்கேற்றுகின்றனர்” என முதல்வர் மு.க.ஸ்டாலினும் பதில் கொடுத்தனர்.

இதைத்தொடர்ந்து, பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க,)

திராவிட முன்னேற்றக் கழகம் (தி.மு.க), அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (அ.தி.மு.க) கட்சியினர் கச்சத்தீவு குறித்து சமூக வலைத்தளங்களில் தீவிரமாக விவாதித்து வருகின்றனர். இந்நிலையில், இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்களிடம் கச்சத்தீவு குறித்த தங்கள் அனுபவங்கள், கருத்துகளைக் கேட்டறிந்தோம். அவர்கள் கூறியதாவது:

**பிரின்சோ ரைமண்ட், ஓலைக்குடா மீனவ கிராமம், இராமேஸ்வரம்:**

இராமேஸ்வரம் ஓலைக்குடாவைச் சேர்ந்த எங்கள் மூதாதையரான அந்தோணிப்பிள்ளை பட்டங்கட்டி என்பவரால் 1913ஆம் ஆண்டு கச்சத்தீவில் மீனவர்களின் பாதுகாவலரான புனித அந்தோணியாருக்கு ஓலைக்குடிசையில் ஆலயம் எழுப்பப்பட்டது. இந்த ஆலயத்துக்கு நாட்டுப் படகுகளில் செல்லும் மீனவ குடும்பங்கள், கடலில் இயற்கைச் சீற்றம், புயல் மற்றும் பேராபத்து காலங்களில் காப்பாற்றவும் பெருமளவு மீன் கிடைக்கவும் அந்தோணியாரிடம் வேண்டிக் கொள்வோம்.

ஆண்டுக்கு ஒருமுறை கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் கச்சத்தீவு அந்தோணியார் ஆலயத்தில் ஒரு வார காலத்துக்குத் திருவிழா நடைபெறும். இவ்விழாவில் பங்கேற்க, இராமேஸ்வரம் மட்டுமின்றி, தமிழகத்தின் பல்வேறு பகுதியிலிருந்து பல்வேறு சமுதாய மக்களும், இலங்கையிலிருந்து தமிழ்மக்களும் படகுகளில் வருவார்கள்.

இந்த திருவிழாவில் இரு நாட்டு உறவுகள் சந்தித்துக் கொள்வதுடன், அவர்களுக்குள் திருமண நிச்சயதார்த்தங்கள் கூட நடைபெறுவதுண்டு. இரு நாட்டினரும் பரிசுப் பொருட்களையும் பகிர்ந்து கொள்வார்கள். ஆனால், தற்போது கச்சத்தீவு திருவிழா 2 நாட்கள்தான் நடைபெறுகின்றன. இந்த திருவிழாவில் கலந்து கொள்வதற்கு அதிகளவில் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

முதலில், இராமேஸ்வரத்திலிருந்து பக்தர்கள் கச்சத்தீவு அந்தோணியார் ஆலயத் திருவிழா செல்லும் பயண ஏற்பாட்டினை மத்திய, மாநில அரசுகள் ஏற்று நடத்த வேண்டும். அப்போதுதான் அனைத்து தரப்பு பக்தர்களாலும் கச்சத்தீவு திருவிழாவுக்குச் செல்ல முடியும்.



↑ என்.ஜே.போஸ்



↑ பிரின்சோ ரைமண்ட்

> **இலங்கை, தமிழக மீனவர்களிடையே ஒப்பந்தம் ஏற்பட வேண்டும் என்றால் முதலில் தமிழக மீனவர்கள் வரி வலை முறைக்கு மாற வேண்டும். அப்போதுதான் இலங்கை மீனவர்கள், இரு நாட்டு மீனவர் பேச்சுவார்த்தைக்கு வர ஒத்துக்கொள்வார்கள்**

> **கச்சத்தீவு கடற்பகுதியில் இரு நாட்டு மீனவர்கள் சந்திக்கும்போது, உணவுப் பரிமாற்றமும் செய்து கொள்வோம். அங்கு உள்நாட்டுப் போர் ஏற்பட்ட பிறகு, தமிழகத்திலிருந்து கச்சத்தீவு பகுதியில் மீன் பிடிப்போரை அந்நாட்டுக் கடற்படையினர் சுட ஆரம்பித்தார்கள்**

> **தமிழக மீனவர்களிடையே இந்த தொழில்முறை மாற்றம் மூலம்தான் கச்சத்தீவு அல்லது இரு நாட்டு மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். மேலும் தேர்தல் காலங்களில் கச்சத்தீவை மீட்பேன் என்ற வாக்குறுதிகளை நம்புவதற்குத் தமிழக மீனவர்கள் ஏமாளிகள் அல்ல**

**என்.ஜே.போஸ், மீனவப் பிரதிநிதி, இராமேஸ்வரம்:**

இலங்கையில் உள்நாட்டுப் போர் ஏற்படுவதற்கு முன்பு வரையிலும் இந்தியாவும், இலங்கையும் ஒரே நாடு போன்று இருந்தன. அப்போது கச்சத்தீவில் ஒருவார காலம் கூட தங்கியிருந்து இராமேஸ்வரம் மீனவர்கள் மீன்பிடித்துத் திரும்புவது வழக்கம். கச்சத்தீவு கடற்பகுதியில் இரு நாட்டு மீனவர்கள் சந்திக்கும்போது, உணவுப் பரிமாற்றமும் செய்து கொள்வோம். அங்கு உள்நாட்டுப் போர் ஏற்பட்ட பிறகு, தமிழகத்திலிருந்து கச்சத்தீவு பகுதியில் மீன் பிடிப்போரை அந்நாட்டுக் கடற்படையினர் சுட ஆரம்பித்தார்கள். இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவுற்று மீண்டும் அந்நாட்டு மீனவர்கள் கடலுக்கு வரத் தொடங்கியபோது, தமிழக மீனவர்கள் மத்தியில், அதிக குதிரைத் திறன் கொண்ட விசைப்படகுகள், தடைசெய்யப்பட்ட இரட்டை மடிவலைகள் என மாற்றங்கள் ஏற்பட்டிருந்தது.

இலங்கை மீனவர்கள் தமிழக மீனவர்களின் இரட்டை மடி வலைகளுக்குத்தான் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். இரு நாட்டு மீனவர்களிடையே ஒப்பந்தம் ஏற்பட வேண்டும் என்றால் முதலில் தமிழக மீனவர்கள் வரி வலை முறைக்கு மாற வேண்டும். அப்போதுதான் இலங்கை மீனவர்கள், இரு நாட்டு மீனவர் பேச்சுவார்த்தைக்கு வர ஒத்துக்கொள்வார்கள்.

தமிழக மீனவர்களிடையே இந்த தொழில்முறை மாற்றம் மூலம்தான் கச்சத்தீவு அல்லது இரு நாட்டு மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

மேலும் தேர்தல் காலங்களில் கச்சத்தீவை மீட்பேன் என்ற வாக்குறுதிகளை நம்புவதற்குத் தமிழக மீனவர்கள் ஏமாளிகள் அல்ல. இவ்வாறு அவர்கள் கூறினர்.



# அழிவடையும் ‘அம்பா’ பாடல்கள்

**ச.பிரியதர்ஷன் குரூஸ் (கோல்டன்)**
**ஊடகக்கற்கைகள் துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

அன்றிலிருந்து இன்று வரை கடவுளையும், கடலையும் நம்பி வாழ்கின்ற சமூகமே மீனவர் சமூகம். அவ்வாறு பெரும்பான்மையான மீனவர் சமூகத்தினையும் மீன்பிடித் தொழிலையும் பிரதான ஜீவனோபாயத் தொழிலாக செய்து வருபவர்களே கரையோர வாழ் மக்கள் ஆவர். அதன்படி, மன்னார் மாவட்டத்தின் கரையோர எல்லைகளான தலைமன்னார், பேசாலை, தாழ்வுபாடு, வங்காலை, முத்தரிப்புத்துறை, மற்றும் முள்ளிக்குளம் வரை உள்ள மீனவர்களால் தாங்கள் கடற்றொழிலில் ஈடுபடுகின்றபோது, அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த பாடல்களே அம்பா பாடல்கள் எனலாம்.

அதன்படி, அம்பா என்ற வார்த்தையானது அம் + பா என்று இரு சொற்களை இணைத்துத் தோன்றியதாகக் கருதப்படுகிறது. இங்கு ‘அம்’ என்பது அழகினையும், ‘பா’ என்பது பாடலையும் குறிப்பதாக அமைந்துள்ளன. எனவே, இங்கு அம்பா என்று கூறுகின்றபோது, அது அழகிய பாடல் என்று பொருள் தருகிறது. அதே சமயம் ‘அம்பி’ என்பது தோணியைக் குறிக்கும் மறு பெயராகும். எனவே அம்பி பற்றி இப்பாடல் எழுந்தமையினால் ‘அம்பி பாடல்’ என்ற பதம் காலப்போக்கில் மருவி ‘அம்பா பாடல்’ என தோற்றம் பெற்றதாக இக் கரையோரப்பகுதிகளில் உள்ள மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

அம்பா பாடல்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தோற்றம் பெற்ற ஒன்றாகும். இந்த ‘அம்பா’ பாடல்களுக்குத் தாய், தந்தை என்று எவரும் இல்லை. ஏனென்றால், இதனை உருவாக்கியவர் யார்? இப்பாடல்களுக்கெல்லாம் சொந்தக்காரர் யார்? என்ற கேள்விகளுக்கான பதில் இதுவரையும் யாராலும் அறியப்படவில்லை. காரணம் இதனை எழுத்து வடிவில் யாரும் உருவாக்கவில்லை, மாறாக வாய்மொழி வாயிலாக மீனவர்களால் கடத்தப்பட்டு வந்த விடயமே இந்த அம்பா பாடல்கள் ஆகும். எனவே, இப்பாடல்கள் அனைத்தும் அப்பன், பாட்டன், முப்பாட்டன் என தலைமுறை தலைமுறையாகவே கடத்தப்பட்டு வந்திருக்கின்றன.

இதன்படி, இங்குள்ள மீனவர்கள் அனைவரும் இந்த அம்பா பாடல்களை தங்களின் பாரமான படகுகளை இழுக்கும் போதும், கரைவலைகளை இழுக்கும் போதும், அதேசமயம் மீன்பிடித் தொழிலில் பாரமான வேலைகளைச் செய்யும் தருணங்களிலும் இந்த அம்பா பாடல்களைப் பாடிக்கொண்டு தமது வேலையை மேற்கொள்வார்கள்.

அவ்வாறு மன்னார் மாவட்டத்தின் முத்தரிப்புத்துறை கிராமத்தில் இந்த அம்பா பாடல்களை உயிர்ப்புடன் வைத்திருக்கும் முதிர்ந்த மீனவரான அ.அந்தோணி பெர்ணான்டோ என்பவரை நேர்காணல் மேற்கொண்ட போது, அவர் பின்வருமாறு கூறுகின்றார். “அக்காலத்தில் எங்களது தோணிகளை இழுப்பதற்கும், கரைவலைகளை இழுப்பதற்கும் நாங்கள் மிகுந்த சிரமப்படுவோம். ஆனால் எங்கள் முன்னோரோ அல்லது நாங்களோ கடற்தொழிலில் பாரமான வேலைகளைச் செய்கின்ற போது அம்பா பாடல்களைப் பாடிக்கொண்டே இழுப்போம்.

ஏனென்றால், இந்த ‘அம்பா’ பாடல்களைப் பாடிக்கொண்டு நாங்கள் தோணிகளையும், வலைகளையும் இழுக்கின்றபோது, எந்தப் பெரிய கடினமான வேலைகளையும் ஒரே நேரத்தில், ஒரே தாளத்தோடு ‘அம்பா’ பாடல்களைப் பாடி மிக இலகுவாகச் செய்து முடிப்போம். உதாரணமாக சொல்லப்போனால், 20 பேர் சேர்ந்து இழுக்க வேண்டிய ஒரு பாரமான படகை ‘அம்பா’ பாடல் பாடினால் ஏழு பேர் அல்லது எட்டு பேர் சேர்ந்து இழுத்து விடுவோம். இதுதான் இந்த ‘அம்பா’ பாடலின் பலம்” என்று தெரிவித்தார்.

“ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது” என்ற பழமொழிக்கு ஒத்ததாக ‘அம்பா’ பாடலின் சிறப்புகளை இவரது கூற்றுக்கள் மூலமாக அறிய முடிகின்றது. அதன்படி, இங்கே வேலைக்களைப்பினை போக்கி நல்ல உடல் உற்சாகத்தோடு மீனவர்களின் வேலைகளினை இலகுவாக்குவதே ‘அம்பா’ பாடல்களின் சிறப்பாகும். இந்த ‘அம்பா’ பாடல்கள் அனைத்தும் கடவுளை வேண்டிப் பாடுவதாகவும், மீனவர்களின் கஷ்டங்களை விபரிப்பதாகவும், பாலியல் சார் இரட்டை அர்த்தங்களை உடையதாகவும், அங்கதச்சுவை மற்றும் நகைச்சுவை தன்மை மிக்கதாகவுமே காணப்படுகின்றன.

இன்னொரு விதத்தில் ‘அம்பா’ பாடல்கள் அனைத்துமே மீனவ சமூகத்தின் ஒற்றுமையினையும் பிரதிபலித்துக் காட்டி நிற்கின்றது. இங்கு அம்பா பாடலை தனி ஒரு நபராகப் பாடி தனியே ஒரு படகினையோ, வலையினையோ இழுக்க முடியாது. மீன்பிடி சமூகத்தில் அனைவரும் ஒற்றுமையாகச் சேர்ந்து அம்பா பாடலினை பாடினால் மட்டுமே வேலைகளை இலகுவாக செய்யமுடியும். இதனால் இவர்கள் தங்களுக்குள் பெரிதளவில் முரண்பட மாட்டார்கள். அவ்வாறு தங்களுக்குள் ஓர் இரவு முரண்பட்டுக் கைகலப்பில் ஈடுபட்டால் கூட காலை விடிந்தவுடன் எல்லாவற்றையும் மறந்து அண்ணன் தம்பியாக, மாமா மச்சானாகக் கைகுலுக்கிக் கொள்ளும் சமூகமே இந்த மீனவர் சமூகம்.

பல வகையான தொழில்கள் இருந்த போதும் உயிரைப் பணயம் வைத்துச் செய்யும் பயங்கரமான தொழிலில்தான் கடற்தொழில் எனலாம். காரணம் ஏனைய தொழில்களுக்குச் செல்பவர்கள் வேலையை முடித்து வீட்டிற்குத் திரும்பி விடுவார்கள். ஆனால் ஓர் மீனவன் தொழிலுக்குச் செல்கின்ற போது அங்குக் காற்றோடும், கடலோடும், பெரும் அலைகளோடும் போராடும் பாரிய சவால் நிறைந்த வாழ்க்கையே மீனவனின் வாழ்க்கை. மீனவன் என்பவன் ஒரு போர் வீரனுக்கு நிகரானவன் எனலாம். போர்க் களத்திற்குச் செல்பவன் திரும்பி வருவானா? என்பது போன்று கடலுக்குச் செல்பவனும் திரும்பி வருவானா? என்ற ஏக்கத்துடன் அவனது மனைவியும், பிள்ளைகளும் காத்துக் கொண்டிருக்கும் வலியைக் கூட சில அம்பா பாடல்களின் வரிகள் ஆழமாக வெளிப்படுத்துவதாக அமைகின்றன. அந்த வரிகள் பின்வருமாறு,

“வட்ட வட்ட லை லை பாத்தி கட்டி ஏலடி அம்மா, மழைக்காலம் நான் வருவேன், ஏலடி அம்மா, கடலடிதான் நிறுத்தாதோடி ஏலடி அம்மா”

இன்னுமாக இந்த அம்பா பாடலை அன்றைய காலத்து மீனவர்கள் மிகப்பெரிய சக்தியாக எண்ணி அதனை நாளாந்தம் தமது தொழில்களில் பயன்படுத்தி வந்தார்கள். உதாரணமாக தங்கள் வள்ளத்தை இழுக்கும் போதும், தண்ணீரில் தள்ளும் போதும் ‘அம்பா’ பாடல்களை பாடிய வண்ணமே தமது தொழிலை ஆரம்பிப்பர்.

அதேசமயம், மீனவர் கடலிலே மீன்களைக் கண்டால் குறிப்பாக நெத்தோலி, தொண்டன், சாளை, காரல் போன்ற மீன்கள் திரளாகக் கடலில் வரும் போது உச்சக் குரலை எழுப்பி சைகை காட்டி மீனவர்களை ஒன்று திரட்டி, அந்த மீன்களைப் பிடிப்பதற்காக வள்ளத்தில் வலித்துச் சென்று அத்தனை மீன்களையும் தங்களது வலையால் வளைத்து விடுவர்.

பின் இரு பக்கமும் உள்ள வலையையும் கயிற்றையும் இழுத்துக் குறுக்குவதற்காகப் பல மீனவர்களை வலையின் இருமருங்கிலும் நிறுத்தி அங்கு நிற்கின்ற அத்தனை மீனவர்களும் இந்த அம்பாக்களை ஒரே நேரத்தில் பாடி அனைவரும் ஒன்றிணைந்து மிகுந்த வலிமையுடன் வலைகளை இழுப்பர். பின்னர் இறுதியாக வரும் மடிமீனை இழுப்பதற்கு இந்த ‘அம்பா’வை இன்னும் அதிக சத்தமாகப் பாடி தங்கள் பலத்தை விட இந்த அம்பாவின் பலமே பெரிதென எண்ணி அனைத்து மீன்களையுமே இழுத்து கரையில் கொண்டு வந்து சேர்த்து விடுவார்கள்.

ஆனால், இன்றைய மீனவ சமூகத்தில் கரைவலைகள் குறைவாக இருந்த போதும் ‘அம்பா’ பாடி இழுக்க வேண்டிய கரைவலையை இன்றைய இளம் தலைமுறையினர் நவீன ரெக்ரர் இயந்திரத்தினை பயன்படுத்தி இலகுவாக இழுத்துவிடுகின்றனர்.

எம் முன்னோர் அம்பா பாடலை பாடி உடல் வலுவால் இழுத்து வந்த படகுகளை இன்றைய இளம் மீனவ சமூகம் அப்படகுகளை பெரும் வலுச்சக்தி மிக்க இயந்திரங்களைப் பூட்டி கடலில் இருந்து அதி வேகத்தில் வந்து தங்கள் படகுகளை இலகுவாகத் தரையில் ஏற்றிவிட்டு அனைத்து வேலைகளையும் முடித்து விட்டு பின்னர் வீட்டிற்குச் செல்கின்றனர்.

இவ்வாறு இந்த இயந்திர உலகத்தின் வளர்ச்சியின் காரணமாக மனித உழைப்பெல்லாம் வலுவிழந்து ‘அம்பா’ பாடல்கள் அனைத்தும் மருவிக்கொண்டு செல்கின்றன என்பது கவலைக்குரிய விடயம். நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தது போன்று எத்தனையோ அர்த்தங்களைச் சொன்ன இந்த ‘அம்பா’ பாடல்கள் இன்றை இளம் மீனவ சமூகத்தின் மத்தியில் அழிவடைந்து சில சமயங்களில் படகை இழுக்கின்ற தருணங்களில் “ஏலோ இலோ” “யாலி , ஓடியாலி” என்ற வார்த்தைகளால் மட்டுமே தொக்கி நிற்கின்றது.

எது எவ்வாறு இருந்தாலும், எத்தனை இயந்திரங்கள் வந்தாலும், ‘அம்பா’ பாடல் பாடி மீனவர்கள் செய்கின்ற வேலைக்கும், மகிழ்வுக்கும் நிகராக எந்த வேலையும் இருக்காது என்பதே இங்கு நிரூபணமான உண்மை.

மேலும், இந்த ‘அம்பா’ பாடல் என்பது ஒரு சமூகம் சார்ந்த கலை என்பதற்கு அப்பால் எமது இனம் சார்ந்த ஓர் அடையாளம். எனவே, தமிழருக்குரிய கலை கலாசாரங்களைப் பொக்கிஷமாகப் போற்றி மதித்து வளர்த்து வருகின்ற ஈழ மண்ணில் இந்த ‘அம்பா’ பாடல்களை அழிய விடாமல் பாதுகாத்து எம் அடுத்த தலைமுறைக்கு கடத்துவதற்கான பொறுப்பு நம் அனைவரது கரங்களிலும் தங்கியுள்ளது.

சென்னை

# இப்பொழுது ஏன் மோடி கிளப்புகிறார்?

"1974ஆம் ஆண்டில் இரு நாடுகளிடையே நடந்த பரிமாற்றத்தை மோடி இப்பொழுது ஏன் கிளப்புகிறார்? என கச்சத்தீவு விவகாரம் தொடர்பில் கேள்வியெழுப்பியுள்ள முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம், 6 இலட்சம் இலங்கைத் தமிழர்களை மீட்டு அவர்களுக்குச் சுதந்திரமும் புது வாழ்வும் தந்தவர் இந்திரா காந்தி" என்று தெரிவித்துள்ளார்.

கச்சத்தீவு தொடர்பாக முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் எக்ஸ் தள பக்கத்தில் பதிவு வெளியிட்டுள்ளார். அதில், "1974ஆம் ஆண்டில் இரு நாடுகளிடையே நடந்த பரிமாற்றத்தை மோடி இப்பொழுது ஏன் கிளப்புகிறார்? 6 இலட்சம் இலங்கைத் தமிழர்களை மீட்டு அவர்களுக்குச் சுதந்திரமும் புது வாழ்வும் தந்தவர் இந்திரா காந்தி. மோடி செய்தது என்ன?. 2,000 சதுர கி.மீ இந்திய பூமியை சீனா அபகரித்திருக்கிறது. 'எந்தச் சீனத் துருப்புகளும் இந்திய மண்ணில் இல்லை' என்று சொல்லி சீனாவின் ஆக்கிரமிப்பை மோடி நியாயப்படுத்தினார். மோடியின் பேச்சை சீனா உலகமெங்கும் பரப்பியது. நல்லுணர்வுடன் பரிமாற்றம் வேறு, காழ்ப்புணர்வுடன் அபகரிப்பது வேறு" என்று அப்பதிவில் தெரிவித்துள்ளார்.




கேரளா மாநிலம்

## மாட்டு தொழுவத்தில் 52 குட்டிகளுடன் பதுங்கியிருந்த ராஜநாகம்

கேரள மாநிலம் கோட்டயம் பகுதியைச் சேர்ந்த ராதாகிருஷ்ணன் என்ற விவசாயி வீட்டின் அருகில் மாட்டுத் தொழுவம் உள்ளது. தற்போது அதில் மாடுகள் எதுவும் வளர்க்கவில்லை என்பதால் அந்த தொழுவம் வெற்றிடமாகக் கிடந்தது.

இந்தநிலையில், கடந்த 2 நாட்களுக்கு முன்பு அவரது வீட்டின் முன்பு 2 குட்டி பாம்புகள் ஊர்ந்து சென்றன. இதனைப் பார்த்த அவர், அந்த பாம்புகள் செல்லும் இடத்தை நோக்கிப் பின்தொடர்ந்து சென்றார். அப்போது அவை அவரது மாட்டுத் தொழுவத்துக்குள் சென்று, மண்ணுக்குள் பதுங்கியது. இதையடுத்து, தொழுவத்தில் அவர் சோதனை செய்தார். அங்கு சுமார் 40க்கும் மேற்பட்ட குட்டி பாம்புகள் இருந்தன. இதை பார்த்து அதிர்ச்சியடைந்த அவர் உடனடியாக கோட்டயம் வனத்துறையினருக்கு தகவல் தெரிவித்தார்.



இதன்பேரில் வனத்துறையினர், பாம்புகள் பிடிக்கும் குழுவினருடன் சம்பவ இடத்துக்கு சென்றனர். அப்போது மாட்டு தொழுவத்தில் தோண்டி பார்த்தனர். அதில் சில பாம்புகள் மட்டுமே பிடிபட்டன. அதைத்தொடர்ந்து இயந்திரம் மூலம் மண்ணுக்குள் தோண்டி பார்த்தனர். அப்போது உள்ளே பெரிய ராஜநாகம் ஒன்று இருந்தது. மேலும், அங்கு இருந்த குட்டி பாம்புகள், ராஜநாகத்தின் குட்டிகள் என்பது தெரியவந்தது.

பெரிய ராஜநாகத்துடன், 52 குட்டிகள் பதுங்கியிருந்தன. அவற்றில் 47 குட்டிகள் உயிருடனும், 5 குட்டிகள் இறந்த நிலையிலும் இருந்தன. இதைத்தொடர்ந்து பெரிய ராஜநாகத்தை சாக்குப்பையிலும், அவற்றின் குட்டிகளை பிளாஸ்டிக் பாட்டிலுக்குள் அடைத்தும் வனத்துறையினர் பிடித்து சென்றனர்.

இதுகுறித்து வனத்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், "ராஜநாகம் அதிகபட்சமாக 30 முதல் 40 முட்டைகள் இட்டு, குட்டிகளை பொரிக்கும். ஆனால் தற்போது பிடிபட்ட ராஜநாகம், 52 குட்டிகளை பொரித்துள்ளது. அவற்றில் 5 குட்டிகள் இறந்துவிட்டன. பிடிபட்ட பாம்புகளை அடர்ந்த வனப்பகுதிக்கு கொண்டுபோய் விட முடிவு செய்துள்ளோம்" என்றார்.

கோட்டயம்

## 'உதிக்காத' சூரியன் உடன்பிறப்புகள் ஆதங்கம்

டெல்டா மாவட்டங்களில் இருக்கும் ஆறு லோக்சபா தொகுதிகளிலும், தென் மாவட்டங்களில் இருக்கும் 10 லோக்சபா தொகுதிகளிலும் பெரும்பாலான இடங்களில் இம்முறை திராவிட முன்னேற்ற கழகம் ( தி.மு.க.) போட்டியிடவில்லை. குறிப்பாக, தென் மாவட்டங்களில் ராமநாதபுரம் முதல் கன்னியாகுமரி வரையிலான 10 தொகுதிகளில் மூன்றில் மட்டுமே இம்முறை தி.மு.க.போட்டியிடுகிறது.



அதேபோல, டெல்டா மாவட்டங்களில் திருச்சி முதல் கடலூார் வரையிலான ஆறு லோக்சபா தொகுதிகளில் ஒரே ஒரு தொகுதியில் மட்டும் இம்முறை தி.மு.க. போட்டியிடுவது, தமிழகத்தின் டெல்டா மற்றும் தென் மாவட்டங்களில் இருக்கும் அக்கட்சியினரை மிகுந்த கவலைக்குள்ளாக்கி இருக்கிறது. தி.மு.கவின் சின்னம் உதய சூரியன் என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்லாமாபாத்

## இம்ரானின் சிறை நிறுத்தி வைப்பு



பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மற்றும் அவரது மனைவிக்கு விதிக்கப்பட்ட 14 ஆண்டு சிறைத் தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டது.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் பிரதமராக இருந்தபோது கிடைத்த பரிசு பொருட்களை கருவூலத்தில் ஒப்படைக்காமல் விற்று மோசடி செய்த வழக்கில், அவருக்கும், மனைவி புஷ்ராவுக்கும் 14 ஆண்டு சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. இம்ரான் கான் அடியாலா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இதையடுத்து இம்ரான் கான் மேன்முறையீட்டு மனுத் தாக்கல் செய்திருந்தார். இந்நிலையில், பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மற்றும் அவரது மனைவிக்கு விதிக்கப்பட்ட 14 ஆண்டு சிறை தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டது.

கராச்சி

## இந்து சிறுமி கடத்தல்

பாகிஸ்தானில் பல பகுதிகளில் சிறுபான்மையின சிறுமிகளைக் கடத்துவதும், அவர்களை மதம் மாற்றி திருமணம் செய்வதும் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வருகிறது. இதற்கு எதிராகச் சட்டங்களைக் கொண்டு வர அரசு முயன்றபோதும், பல அமைப்புகள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

கடந்த 2 நாட்களுக்கு முன் சிந்த் மாகாணத்தில், ஹோலி பண்டிகையையொட்டி, வீட்டிலிருந்த 2 சிறுமிகள் கடத்தப்பட்டனர்.

இந்நிலையில், சிந்த் மாகாணத்தில் சுக்கூர் பகுதியில் தன்னுடைய குடும்பத்துடன் வசித்து வந்த பிரியா குமாரி என்ற இந்து சமூக சிறுமி மர்ம நபர்களால் சில நாட்களுக்கு முன் கடத்தப்பட்டு உள்ளார். இதனைத் தொடர்ந்து, இந்து சமூக உறுப்பினர்கள் மற்றும் வர்த்தகர்கள் ஒன்று கூடித் தேரா முராத் ஜமாலி பகுதியில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



சிந்த் மாகாணத்தில் தொடர்ந்து சிறுமிகளை கடத்துவது அதிகரித்து காணப்படுகிறது.

பங்களாதேஷுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

# வெற்றியை நோக்கி இலங்கை



பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் வெற்றியை நோக்கி இலங்கை நகருகிறது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை இலங்கை வென்ற நிலையில், சட்டோகிராமில் கடந்த சனிக்கிழமை (30) ஆரம்பமான குறித்த டெஸ்டின் நேற்றைய நான்காம் நாளை தமது இரண்டாவது இனிங்ஸில் 6 விக்கெட்டுகளை இழந்து 102 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த இலங்கை ஷகிப் அல் ஹஸனிடம் 56 ஓட்டங்களுடன் அஞ்சலோ மத்தியூஸ் வீழ்ந்ததைத் தொடர்ந்து 7 விக்கெட்டுகளை இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றபோது தமது இனிங்ஸை இடைநிறுத்தியது. பிரபாத் ஜெயசூரிய 28 ஓட்டங்களுடனும், விஷ்வ பெர்ணாண்டோ எட்டு ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இதையடுத்து, 511 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ், பிரபாத் ஜெயசூரிய (2), விஷ்வ பெர்ணாண்டோ, லஹிரு குமார (2), கமிந்து மெண்டிஸிடம் (2) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து நேற்றைய நான்காம் நாள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 268 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தற்போது களத்தில் மெஹிடி ஹஸன் மிராஸ் 44, தஜியுல் இஸ்லாம் 10 ஓட்டங்களுடன் உள்ளனர்.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

இலங்கை: 531/10 (துடுப்பாட்டம்: குசல் மெண்டிஸ் 93, கமிந்து மெண்டிஸ் ஆ.இ 92, திமுத் கருணாரத்ன 86, தனஞ்சய டி சில்வா 70, தினேஷ் சந்திமால் 59, நிஷான் மதுஷ்க 57 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷகிப் அல் ஹஸன் 3/110, ஹஸன் மஹ்மூட் 2/92, காலிட் அஹ்மட் 1/71, மெஹிடி ஹஸன் மிராஸ் 1/146)

பங்களாதேஷ்: 178/10 (துடுப்பாட்டம்: ஸகிர் ஹஸன் 54, மொமினுல் ஹக் 33 ஓட்டங்கள். பந்துவீச்சு: அசித பெர்ணாண்டோ 4/34, லஹிரு குமார 2/19, விஷ்வ பெர்ணாண்டோ 2/38, பிரபாத் ஜெயசூரிய 2/65)

இலங்கை: 157/7 (துடுப்பாட்டம்: அஞ்சலோ மத்தியூஸ் 56, நிஷான் மதுஷ்க 34 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஹஸன் மஹ்மூட் 4/65, காலிட் அஹ்மட் 2/34, ஷகிப் அல் ஹஸன் 1/39)

பங்களாதேஷ்: 268/7 (துடுப்பாட்டம்: மொமினுல் ஹக் 50, மெஹிடி ஹஸன் மிராஸ் ஆ.இ 44 லிட்டன் தாஸ் 38, ஷகிப் அல் ஹஸன் 36 ஓட்டங்கள். பந்துவீச்சு: கமிந்து மெண்டிஸ் 2/22, லஹிரு குமார 2/41, பிரபாத் ஜெயசூரிய 2/79, விஷ்வ பெர்ணாண்டோ 1/39)

பங்களாதேஷுக்கெதிரான

## இரண்டாவது டெஸ்டிலிருந்து விலகிய சந்திமால்



பங்களாதேஷுக்கெதிரான நடைபெற்றுக் கொண்டிருக்கும் இரண்டாவது டெஸ்டிலிருந்து நேற்றைய நான்காம் நாளில் குடும்ப மருத்துவ அவசரநிலை காரணமாக விலகி கொழும்பை இலங்கையின் துடுப்பாட்டவீரரான தினேஷ் சந்திமால் வந்தடைந்திருந்தார்.

இலங்கையின் இரண்டாவது இனிங்ஸில் மூன்றாம் நாளிலேயே சந்திமால் ஆட்டமிழந்திருந்தார்.

## ஐ.பி.எல்: மும்பையை வீழ்த்திய ராஜஸ்தான்



இந்தியன் பிறீமியர் லீக் (ஐ.பி.எல்) தொடரில், மும்பையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற மும்பை இந்தியன்ஸுடனான போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: ராஜஸ்தான் றோயல்ஸ்

மும்பை இந்தியன்ஸ்: 125/9 (20 ஓவ.) துடுப்பாட்டம்: ஹர்திக் பாண்டியா 34 (21), திலக் வர்மா 32 (29) ஓட்டங்கள். பந்துவீச்சு: யுஸ்வேந்திர சஹால் 3/11 [4], ட்ரெண்ட் போல்ட் 3/22 [4], நன்ட்ரே பேர்கர் 2/32 [4], ஆவேஷ் கான் 1/30 [4], இரவிச்சந்திரன் அஷ்வின் 0/27 [4])

ராஜஸ்தான் றோயல்ஸ்: 127/4 (15.3 ஓவ.) (துடுப்பாட்டம்: ரியான் பராக் ஆ.இ 54 (39) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஆகாஷ் மத்வால் 3/20 [4], பியூஷ் சாவ்லா 0/18 [3], ஜஸ்பிரிட் பும்ரா 0/26 [4])

போட்டியின் நாயகன்: ட்ரெண்ட் போல்ட்

இந்நிலையில், விசாகப்பட்டினத்தில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் கொல்கத்தா நைட் றைடர்ஸை டெல்லி கப்பிட்டல்ஸ் எதிர்கொள்கிறது.

## உலகக் கிண்ணத்திலிருந்து விலகிய ஸ்டோக்ஸ்



சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரிலிருந்து விலகியுள்ள இங்கிலாந்தின் டெஸ்ட் போட்டிகளுக்கான அணித்தலைவர் பென் ஸ்டோக்ஸ், அணித்தெரிவின்போது தான் கருத்திற் கொள்ளப்படுவதை விரும்பவில்லை என இங்கிலாந்து முகாமைத்துவத்துக்கு அவர் கூறியுள்ளார்.

"கடந்த இருபதுக்கு-20 உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் வெற்றி ஓட்டங்களைப் பெற்றார்

கடந்த இருபதுக்கு-20 உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் வெற்றி ஓட்டங்களைப் பெற்ற ஸ்டோக்ஸ் அதன் பிறகு இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளில் விளையாடியிருக்கவில்லை.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 03 ஏப்ரல் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.